## (ஊ) வங்கித் தொழில்களும் கொடுகடனும்

**மகாவங்கி**

1962ம் ஆண்டு சென்மதி நிலுவை நிலைமை முந்தைய ஆண்டுகளிலும் பார்க்கச் சீர்திருந்தும் போக்கைக் காட்டியது எனினும், மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதிகள் முதல் ஒன்பது மாதங்களிற் தொடர்ந்தும் வீழ்ச்சியுற்றுச் சென்றன. 1962ம் ஆண்டில், சர்வதேச ஒதுக்குநிதி ரூபா 326 இலட்சத்தால் அல்லது 17.7 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது என்பது 1961ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 55 இலட்சம் அல்லது 2.9 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. வர்த்தக வங்கிகளுக்கும் வங்கி ஊழியர்களுக்குமிடையிற் தொழிற் தகராறு நிலவிய காலத்தில், கொடுப்பனவு செய்யப்படாத இறக்குமதி உண்டியல்கள் குவிந்துகொண்டமையால், சர்வதேச ஒதுக்குநிதி அதிகரிக்கும் போக்கு தென்பட்டது. இவ்வதிகரிப்பு பல வகையில் அதே காலத்தில் பணநிரம்பலில் ஏற்பட்ட புள்ளிவிபர வீக்கத்திற்குச் சமமானதாகும். 1962ம் ஆண்டின் ஆனிமாதமளவில், மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதி தனது உண்மையான அளவைக் காட்டத்தொடங்கியது. ரூபா 1711 இலட்சமாக இருந்த சர்வதேச ஒதுக்குநிதி, புரட்டாதி மாதத்தில் ரூபா 1237 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்று என்றுமில்லாத தாழ்ந்த மட்டத்தை அடைந்தது. முந்தைய வருடத்தில் சர்வதேச ஒதுக்கு நிதியின் ஆகக்குறைந்த மட்டமான ரூபா 1758 இலட்சம், 1961ம் ஆண்டு மாசிமாதத்தில் உண்டானது ஆகும். 1962ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதி நிதானமாக அதிகரித்து அவ்வருட முடிவில் ரூபா 1521 இலட்சத்தை அடைந்தது. சர்வதேச ஒதுக்குநிதி, 1962ம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களிலும் சிறிது அதிகரித்தமை, அநேகமான இறக்குமதிப் பொருட்களை ஒரு பரந்த இறக்குமதி உத்தரவுச் சீட்டு முறையின் மூலம் கட்டுப்படுத்தியமையால் சென்மதி நிலுவை நிலைமை அக்காலத்தில் சீர்த்திருத்தம் அடைந்தமையைப் பிரதிபலிக்கின்றது. 1962ம் ஆண்டில் சர்வதேச ஒதுக்குநிதியின் சராசரி மட்டம் ரூபா 1674 இலட்சமாக இருந்தமை, 1961ம் ஆண்டுக்குரிய சராசரி மட்டமான ரூபா 2037 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது.

மகாவங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள், 1961ம் ஆண்டு மார்கழி மாத இறுதியில் உள்ள ரூபா 9425 இலட்சத்திலிருந்து ரூபா 1577 இலட்சத்தால் அதிகரித்து, 1962ம் ஆண்டு மார்கழியில் ரூபா 11002 இலட்சத்தை அடைந்தன. மகாவங்கி அரசாங்கத்திற்கு வழங்கிய முற்பணங்கள், ரூபா 1932 இலட்சத்திலிருந்து ரூபா 30 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 1962 இலட்சமாக விளங்கின. 1962ம் ஆண்டு ஆனிமாதம் முதல் மகாவங்கியின் முற்பணங்கள் ரூபா 1960 இலட்சத்திலிருந்து வீழ்ச்சியுற்று, கார்த்திகை மாதத்தில் ரூபா 1752 இலட்சத்தை அடைந்தன எனினும், அதன்பின் அவை அதிகரித்து, அவ்வாண்டு முடிவில் ரூபா 1962 இலட்சமாக விளங்கின. மகாவங்கி அரசாங்கத்திற்கு நேரடியாக வழங்கிய முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன், மகாவங்கியின் உடமைகளான அரசாங்கப்பிணைகள், அரசாங்க உத்தரவாதப்பிணைகள் ஆகியவற்றின் தொகையும், ரூபா 7095 இலட்சத்திலிருந்து பெருமளவான ரூபா 1759 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 8854 இலட்சத்தை அடைந்தது. இதில் மகாவங்கியின் உடமைகளாக இருந்த இறைசேரி உண்டியல்கள், இதே காலத்தில் 1961ம் ஆண்டின் இறுதியிலிருந்த ரூபா 6889 இலட்சத்திலிருந்து ரூபா 1775 இலட்சத்தால் அதிகரித்து, 1962ம் ஆண்டு இறுதியில் ரூபா 8664 இலட்சமாக உயர்ந்தன. இந்த வருடத்தில் மகா வங்கியினது உடமைகளான அரசாங்கப்பிணைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1961ல் அவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பான 1408 இலட்சத்திலும், கூடிய அளவில் அமைந்தது.

வர்த்தக வங்கிகளுக்கும் வங்கி ஊழியர்களுக்கும் இடையிற் தொழிற் தகராறு நிலவிய காலத்தைத் தவிர 1962ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு நிதி நிலைமை முந்தைய ஆண்டிலும் பார்க்க மிக வேறுபட்டதாக இருக்கவில்லை. வங்கிகளின் மொத்த மேலதிக ஒதுக்குநிதி, 1962ம் ஆண்டு புரட்டாதி மாதத்தையும், மார்கழி மாதத்தையும் தவிர, ஏனைய காலத்தில் ரூபா 15 இலட்சத்திற்கு மேற்படாமல் இருந்தது. வங்கிகள் முழுவதையும் ஒன்ருக நோக்குமிடத்து அவற்றின் ஒதுக்குநிதிகள் தாழ்ந்த மட்டத்தில் இருந்தமை, பலவங்கிகளை மகாவங்கியிடம் உதவி கோரத்தூண்டியது. அன்றியும் வெவ் வேறு வங்கிகளில் உள்ள ஒதுக்கு நிதிகள் கூடியும் குறைந்தும் சமமற்ற முறையில் இருந்தமையால் வங்கிகள் தத்தம்மிடையே படும் கடன்கள் அதிகரிக்கலாயின.

கடந்த சில ஆண்டுகளில், பணநிரம்பலில் நாணயம், நாணயத்தாள்களின் பங்கு அதிகரித்துள்ளமை பற்றி இவ்வறிக்கையின் முன்ஞெரு பகுதியிற் குறிப்பிடப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு முந்தைய ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானதாகும். 1961ம் ஆண்டு நாணயம், நாணயத்தாள்கள் ஆகியன ரூபா 1190 இலட்சத்தால் அதிகரித்தற்கு எதிராக, 1962ம் ஆண்டில் அவை ரூபா 260 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்தன. இவ்வருடம் நாணயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைவாக உள்ளது; ஏனெனில், வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அதிலும் பார்க்க மிகக் கூடியதாக இருந்தது. வைப்புக்கள் அதிகரித்தமை, முக்கியமாக, முன்பு வங்கித் தொழில் வசதிகள் கிடைக்காத பிரதேசங்களில் மக்கள் வங்கியின் தொழிற்பாடுகள் துரிதமாக அதிகரித்தமையால் ஏற்பட்டது. 1962ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலும் வழக்கமான வங்கிச் சேவைகள் நிலைகுலைந்து இருந்தமையால் நாணய வெளியீடு தீட்சணமாக அதிகரித்தபின் அது வீழ்ச்சியடைந்து, 1962ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் ரூபா 7656 இலட்சத்திற்குக் குறைந்தது. மார்கழி மாதத்தில் வழக்கம்போல் நுகர்வோரின் செலவுகள் அதிகரிக்கின்றமையாலும், நாணயத்திற்கு இருக்கும் கேள்வியிற் கால அதிகரிப்பு ஏற்படுகின்றமையாலும், நாணயவெளியீடும், ரூபா 7894 இலட்சத்திற்கு அதிகரித்தது. கேள்விவைப்புக்களிலும் பார்க்க நாணய வெளியீடு அதிகரித்துச்சென்ற தன்மை, 1962ம் ஆண்டில் ஓரளவிற் தடுக்கப்பட்டது என்பது, 1962ம் ஆண்டில் நிலவிய போக்கிலிருந்து தெரிகிறது. இந்நிலைமை நாட்டிலுள்ள வங்கிச் சேவை வசதிகளில் ஏற்படும் அதிகரிப்போடு இன்னும் சீர்திருந்தக்கூடும். மகாவங்கியில் உள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகள் 866 இலட்சம் ரூபாய்களிலிருந்து 201 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து 1067 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. இவ்வைப்புகள் அதிகரித்தமை, இவ்வருடத்தில் வர்த்தக வங்கிகளில் இருந்த வைப்புகள் அதிகரித்தமையால் அவற்றிற்கு எதிராகக் கூடிய ஒதுக்கு நிதிகளை வர்த்தக வங்கிகள் மகாவங்கியிற் கட்டவேண்டியதனுல் ஏற்பட்டது. சர்வதேசத் தாபனங்களினதும், அந்நிய அரசாங்கங்களினதும், வெளியூர் வங்கிகளினதும் வைப்புக்கள் ரூபா 1284 இலட்சத்திலிருந்து ரூபா 595 இலட்சத்தாற் தீட்சணமாக அதிகரித்து, ரூபா 1879 இலட்சத்திற்கு உயர்ந்தது. இவ்வைப்புகள், தை மாதத்திற்குரிய ரூபா 1265 இலட்சத்திலிருந்து மாசி மாதத்தில் ரூபா 1798 இலட்சத்திற்குத் தீட்சணமாக உயர்ந்து, பின் கார்த்திகை மாதத்திற்குரிய 1790 இலட்சத்திலிருந்து மார்கழி மாதத்தில் ரூபா 1879 இலட்சத்திற்கு அதிகரித்தன. இவ்வைப்புக்களின் அதிகரிப்பு, பெரும்பாலும் 1962ம் ஆண்டு மாசிமாதம் சர்வதேச நாணய நிதி ஸ்தாபனத்திலிருந்து ரூபா 538 இலட்சம் கொண்ட அந்நிய செலாவணி கொள்வனவு செய்யப்பட்டமையால் ஏற்பட்டது. மொத்த நாணய வெளியீடு, ஏனைய கேள்விப் பொறுப்புகள்

ஆகியன அதிகரித்தமையாலும், சர்வதேச ஒதுக்குநிதி வீழ்ச்சியுற்றமையாலும், பணத்தொகைகேள்விப் பொறுப்புகள் முதலியனவற்றின் மொத்தத் தொகையில் சர்வதேச ஒதுக்குநிதியின் விகிதம், 18.7 சதவீதத்திலிருந்து 13.9 சதவீதத்திற்குத் தீட்சணமாகக் குறைந்தது. பணத்தொகை, கேள்விப் பொறுப்புக்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையிற் சர்வதேச ஒதுக்கு நிதியின் விகிதம் இந்தத் தாழ்வான மட்டத்திற்கு, முன்எக்காலத்திலும் வீழ்ச்சியடையவில்லை.

## கொடுகடன் கொள்கை

நாட்டின் அந்நிய செலாவணி உடமைகளில் அதிவிரைவாக ஏற்படும் வீழ்ச்சியைத் தடுப்பதற்கு நோக்கமாகக் கொண்டு, முந்தைய மூன்று வருடங்களில் மகாவங்கி புகுத்திய கொடுகடன் கட்டுப்பாட்டு, நடவடிக்கைகளை 1962ம் ஆண்டு தொடர்ந்தும் மகாவங்கி நடைமுறையில் வைத்திருந்தது. அவ்வித கொடுகடன் கட்டுப்பாடுகளை மகாவங்கி தொடர்ந்து நடைமுறையில் வைத்திருந்தமை, அரசாங்கம் புகுத்திய பரந்த இறக்குமதி அளவுக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குப் பக்கபலமாக நின்று உதவியது. அந்நியர்களுக்குச் சொந்தமான இலங்கையிலுள்ள பெருந் தோட்டங்களையோ, பூதனங்களையோ கொள்வனவு செய்வதற்கு முதலீட்டும் வகையில் வர்த்தக வங்கிகள் வழங்கும் கொடுகடன்களின் மேல் உள்ள கட்டுப்பாடுகளை, மகாவங்கி 1962ம் ஆண்டு மார்கழி மாதத்தில் மாற்றியமைத்தது. இதுசம்பந்தமாக மகாவங்கியின் நாணயச்சபைவிடுத்த பணிப்பில், அந்நியர்களுக்கோ இலங்கையர்களுக்கோ சொந்தமான பெருந் தோட்டங்களை இலங்கை வாசிகள் அல்லது இலங்கையிற் பதிவுசெய்யப்பட்ட கூட்டு நிலையங்கள் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக வங்கிகள் வழங்கும் கொடுகடன், அத்தோட்டங்களின் கொள்வனவு விலையில் $33\frac{1}{3}$ சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டுமென விதிக்கப்பட்டது. இக்கட்டுப்பாடு, இலங்கைக்கு வெளியூர்களில் வசிக்கும் தனியாட்களுக்கோ அல்லது வெளியூர்களிற் கூட்டுவிக்கப்பட்ட கூட்டு நிலையங்களுக்கோ சொந்தமான ஏனைய (தோட்டங்கள் அல்லாத) அசைவற்ற சொத்துக்களை, இலங்கைவாசிகள் அல்லது இலங்கையிற் பதிவுசெய்யப்பட்ட கூட்டு நிலையங்கள் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக வங்கிகள் வழங்கும் கொடுகடனுக்கும் அமையும், என விதிக்கப்பட்டது.

இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துநிலை தாழ்ந்த மட்டத்தில் இருந்தமையால், வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தொழிலைத் துண்டிப்பதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் தேவைப்படவில்லை. இறக்குமதிகளின் மீது கட்டுப்பாடுகள் இருந்தமையால், இறக்குமதிகளுக்கு நிதியீட்டும் வகையில் வர்த்தக வங்கிகள் இவ்வருடத்தில் வழங்கிய கொடுகடன்களின் அளவும் தாமாகவே சுருங்கியது. இதே வேளையில், தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்களின் அதிகரிப்பு, பொதுமக்கள் தமது பணப் பகுதிகளை அதிகரிக்கத் தலைப்பட்ட போக்கின் அறிகுறியாகும். இத்தன்மையில் ஒருபகுதி, நுகர்வோர் செலவுகளின் மேல் இறக்குமதிக்கட்டுப்பாடுகளும், ஏனைய மறைமுகக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டதன் விளைவாகச் செலவுத் துறைகள் குறுகியமையாலும், ஏற்பட்டிருக்கலாம்.

## வர்த்தக வங்கிகள்

1961ம் ஆண்டு ஆடி மாதத்திற் தொழிற்படத் தொடங்கிய மக்கள் வங்கி விரைவாகப் பரந்து செல்வதற்கான தனது கொள்கையை, 1962ம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடித்தது. 1961ம் ஆண்டு முடிவுவரை கொழும்புக்கு அப்பால் ஏழு கிளைகளை ஆரம்பித்த இவ்வங்கி, 1962ம் ஆண்டிற் தனது கிளைகளின் தொகையை 24க்கு அதிகரித்தது. இதில், 15 கிளைகள் முன்பு வங்கிவசதிகள் இல்லாத நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை வங்கி இவ்வருடத்திற் புதிய கிளைகள் எதையும் நிறுவவில்லை. ஆதலின் அதன் மொத்த அலுவலகங்கள் 27 ஆகவே இருந்தன. 1962ம் ஆண்டின் இறுதியில் உள்ள வங்கி அலுவலகங்களின் மொத்தம் 72 ஆகவும், அதில் 20 அலுவலகங்கள் கொழும்பிலும் இருந்தன. 1962ம் ஆண்டு முடிவிற் காணப்பட்ட உள்நாட்டு வங்கிகளுக்கும், அந்நிய வங்கிகளுக்கும் இடையேயுள்ள வங்கி அலுவலகங்களின் பங்கீட்டையும், வைப்புக்களின் பங்கீட்டையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II ஊ-1**

**வங்கி அலுவலகங்கள், வைப்புக்கள் முதலியவற்றின் பங்கீடு**

| மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய வங்கிகளும் ஏனைய வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை | % | | பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை | % | | பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை | % | | பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை | % |
| 72 | 1182 | 100 | 55 | 683 | 58 | 12 | 428 | 36 | 5 | 70 | 6 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள், முதலியனவற்றின் பங்கீடு, பின்னிணைப்பு, 11ல் உள்ள 4ம் அட்டவணையில் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவ்விபரங்களின் சுருக்கம் பின்வரும் அட்டவணையிற் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II ஊ-2

## வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியவற்றின் பங்கீடுகள்

### (மாத எண்தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1952 | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் (நியதிச்சட்டமுறையான ஒதுக்குப்பணமும் உட்பட மகா வங்கியில் வைக்கப்பட்ட வைப்புக்களும்) .. | 177 | 128 | 106 | 149 | 148 | 139 | 119 | 116 | 132 | 148 | 186 |
| அந்நிய நிலுவைகள் .. | 97 | 44 | 55 | 112 | 116 | 72 | 50 | 52 | 58 | 54 | 55 |
| இறைசேரி உண்டியல்கள் | 39 | 55 | 60 | 51 | 39 | 34 | 16 | 24 | 28 | 51 | 89 |
| கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள் .. | 64 | 65 | 73 | 94 | 93 | 100 | 116 | 119 | 115 | 122 | 136 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் .. | 377 | 292 | 294 | 406 | 396 | 345 | 301 | 311 | 333 | 375 | 466 |
| மொத்த முதலீடுகள் (1) | 235 | 235 | 221 | 245 | 291 | 308 | 296 | 285 | 284 | 290 | 303 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் .. | 176 | 182 | 208 | 244 | 273 | 340 | 363 | 395 | 430 | 435 | 478 |
| கேள்விவைப்புக்கள் (2) | 653 | 573 | 562 | 675 | 731 | 721 | 661 | 655 | 657 | 677 | 826 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் | 95 | 102 | 126 | 190 | 206 | 240 | 263 | 300 | 340 | 359 | 380 |
| மொத்த வைப்புக்கள் .. | 754 | 677 | 689 | 869 | 941 | 965 | 926 | 955 | 998 | 1036 | 1210 |
| சதவீதம்:— | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. | 27·1 | 22·3 | 18·9 | 22·1 | 20·2 | 19·3 | 18·0 | 17·7 | 20·1 | 21·9 | 22·5 |
| மொத்த வைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. | 23·5 | 18·9 | 15·4 | 17·1 | 15·7 | 14·4 | 12·9 | 12·1 | 13·2 | 14·3 | 15·4 |
| மொத்த வைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் .. | 12·9 | 6·5 | 8·0 | 12·9 | 12·3 | 7·5 | 5·4 | 5·4 | 5·8 | 5·2 | 4·5 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம் .. | 5·2 | 8·1 | 8·7 | 5·9 | 4·1 | 3·5 | 1·7 | 2·5 | 2·8 | 4·9 | 7·3 |
| மொத்த வைப்புக்களுக்குக் கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் .. | 8·5 | 9·6 | 10·6 | 10·8 | 9·9 | 10·4 | 12·5 | 12·5 | 11·5 | 11·8 | 11·2 |
| கேள்வி வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் .. | 57·7 | 50·9 | 52·3 | 60·1 | 54·2 | 47·9 | 45·5 | 47·5 | 50·7 | 55·4 | 56·4 |
| மொத்த வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் .. | 50·0 | 43·1 | 42·7 | 46·7 | 42·1 | 35·8 | 32·5 | 32·6 | 33·4 | 36·2 | 38·5 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் .. | 31·2 | 34·7 | 32·1 | 28·2 | 30·9 | 31·9 | 32·0 | 29·8 | 28·5 | 28·0 | 25·0 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்கள், மேலதிகப் பற்றுக்களின் விகிதம் .. | 23·3 | 26·9 | 30·2 | 28·1 | 29·0 | 35·2 | 39·2 | 41·4 | 43·1 | 42·0 | 39·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(1) அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மகாவங்கி வெளியீடுகளும்.
(2) உள்நாட்டு வங்கிகள் இடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

1961ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் மொத்த வைப்புக்கள் குறிப்பிடும்படியாக அதிகரித்தன. கேள்வி வைப்புக்களும், தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களும் சரிநிகரான விகிதாச்சாரத்தால் உயர்ந்தன. மொத்த வைப்புக்கள், ரூபா 10210 இலட்சத்திலிருந்து ரூபா 1615 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 11825 இலட்சத்திற்கு உயர்ந்தன. கேள்வி வைப்புக்கள் ரூபா 6573 இலட்சத்திலிருந்து ரூபா 988 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 7561 இலட்சமாக விளங்கின. தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்கள் ரூபா 3638 இலட்சத்திலிருந்து ரூபா 4264 இலட்சத்திற்கு ரூபா 626 இலட்சத்தால் அதிகரித்தன. மொத்த வைப்புப் பொறுப்புக்களின் மாதச் சராசரி, 1961ம் ஆண்டில் ரூபா 10360 இலட்சமாக இருந்ததிற்கு எதிராக 1962ம் ஆண்டில் ரூபா 12100 இலட்சமாக விளங்கியது. வைப்புக்களின் அதிகரிப்பு ஒருவகையிற் பணநிரம்பல் அதிகரித்தமையால் ஏற்பட்டதோடு, பொதுமக்களும் தங்கள் வருமானங்களிற் கூடுதலான பகுதியை வங்கி வைப்புக்கள் வடிவத்தில் வைத்திருக்க விரும்பியதினுல் ஏற்பட்டது. ஆனுல் முந்தைய வருடங்களிற் பொதுமக்கள் தங்கள் வருமானங்களிற் பெரும்பகுதியைப் பண வடிவத்தில் வைத்திருந்தது போற் காணப்பட்டது. கேள்வி வைப்புக்களும், தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களும், அதிகரித்தமைக்கு மற்றுமோர், காரணமாவது, வங்கிச் சேவை வசதிகள் முக்கியமாகப் புதிய கிளை ஸ்தாபனங்களின் ஊடாகத் துரிதமாகப் பரப்பப்பட்டமையாகும்.

தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களின் மொத்தத்தில் முந்தைய ஆண்டு ஏற்பட்ட வீழ்ச்சிக்கு எதிராக, 1962ம் ஆண்டில் அதிகரிப்பு ஏற்பட்டமை பெரும்பாலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனுல் பல்வேறு வகையான நுகர்ச்சிப் பொருட்கள், நீண்டகால உபயோகமுள்ள பொருட்கள் ஆகியன கிடைப்பது குறுகியமையினுலேயேயாகும். கட்டுப்பாடுகள் இல்லையேல் அவ்வித பொருட்களிற் செலவாக வேண்டிய பணம், இப்பொழுது பண மிகுதிகளாகத் தங்கியுள்ளது. சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு உண்மையில் ஒரு விரும்பத்தக்க பலனுடையது. ஏனெனில் வருமானங்களில் ஒரு கூடுதலான பகுதி சேமிக்கப்படுகின்றமையால், அது உள்நாட்டு விலைவாசிகளின் ஏற்றத்தைத் தடுக்கத்தக்கதாக அமைந்துள்ளது. தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, வர்த்தக வங்கிகளும் சேமிப்பு நிலையங்களும், நிலையானவைப்புக்களுக்குக் கொடுக்கும் வட்டி விகிதங்கள் மாற்றப்படாமல் இருக்கையில் ஏற்பட்டது. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்காக இலங்கைச் சேமிப்பு வங்கியாற் கொடுக்கப்படும் வட்டி விகிதம், 1962ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் ½ சதவீதத்தால் அதிகரித்தது.

1961ம் ஆண்டு புரட்டாதி, மார்கழி ஆகிய மாதங்களின் முடிவிலும், 1962ம் ஆண்டு ஆனிமாத முடிவிலும், வங்கிவைப்புக்களின் உடமையாளர்களை (அரசாங்க வைப்புக்களையும் வங்கிகளிடையே ஏற்பட்டனவற்றையும் தவிர்த்து), பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவ்வட்டவணையில் உள்ள விபரங்கள் யாவும் வங்கித் தவணைக்கடன்கள், முற்பணங்கள், வைப்புக்களின் உடமையாளர்கள் ஆகியன சம்பந்தமாக மகாவங்கி நடாத்தும் அரையாண்டு அளவைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். முந்தைய ஆண்டுகளிற் பங்குனி, புரட்டாதி ஆகிய மாதங்களின் முடிவில் நடாத்தப்பட்ட இந்த அளவை, 1962ம் ஆண்டு முதல் ஆனி, மார்கழி ஆகிய மாதங்களின் இறுதியில் நடாத்தப்படுகின்றது.

## அட்டவணை II ஊ-3

### வைப்புக்களின் உடமையாளர்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடமையாளர்கள் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சத வீதம் | தொகை | சத வீதம் | தொகை | சத வீதம் | தொகை | சத வீதம் |
| **நிதி நிலையங்கள்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 46·5 | 7·8 | 55·0 | 26·6 | 3·7 | 2·9 | 105·2 | 11·3 |
| 1961 மார்கழி .. | 57·1 | 9·9 | 50·0 | 23·2 | 4·4 | 3·4 | 111·5 | 12·1 |
| 1962 ஆனி .. | 53·7 | 9·3 | 56·7 | 25·3 | 4·2 | 3·2 | 114·6 | 12·3 |
| **தோட்டங்கள்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 101·4 | 17·1 | 44·4 | 21·4 | 0·1 | ... | 146·0 | 15·7 |
| 1961 மார்கழி .. | 102·1 | 17·6 | 46·3 | 21·5 | 0·9 | 0·7 | 149·2 | 16·2 |
| 1962 ஆனி .. | 82·8 | 14·3 | 36·1 | 16·1 | 1·0 | 0·8 | 119·9 | 12·8 |
| **வர்த்தகம்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 91·2 | 15·4 | 13·3 | 6·4 | 1·1 | 0·9 | 105·6 | 11·4 |
| 1961 மார்கழி .. | 82·7 | 14·3 | 13·1 | 6·1 | 0·7 | 0·5 | 96·5 | 10·5 |
| 1962 ஆனி .. | 113·5 | 19·6 | 12·3 | 5·5 | 2·9 | 2·2 | 128·8 | 13·8 |
| **ஏனைய வியாபாரம்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 68·9 | 11·6 | 17·5 | 8·5 | 1·8 | 1·4 | 88·1 | 9·5 |
| 1961 மார்கழி .. | 69·0 | 11·9 | 23·2 | 10·8 | 2·2 | 1·7 | 94·3 | 10·2 |
| 1962 ஆனி .. | 71·1 | 12·3 | 28·9 | 12·9 | 3·1 | 2·4 | 103·1 | 11·0 |
| **உள்ளூர் ஆட்சிச்சபைகள்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 21·0 | 3·5 | 19·0 | 9·2 | 0·2 | 0·2 | 40·2 | 4·3 |
| 1961 மார்கழி .. | 15·1 | 2·6 | 26·1 | 12·1 | 0·2 | 0·2 | 41·5 | 4·5 |
| 1962 ஆனி .. | 10·1 | 1·7 | 26·7 | 11·9 | 0·6 | 0·5 | 37·4 | 4·0 |
| **வியாபார சம்பந்தமல்லாத நிலையங்கள்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 33·8 | 5·7 | 7·3 | 3·5 | 2·3 | 1·8 | 43·4 | 4·7 |
| 1961 மார்கழி .. | 35·1 | 6·1 | 5·8 | 2·7 | 3·3 | 2·6 | 44·2 | 4·8 |
| 1962 ஆனி .. | 33·6 | 5·8 | 15·7 | 7·0 | 10·7 | 8·2 | 60·0 | 6·4 |
| **தனியாட்கள்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 230·0 | 38·8 | 50·5 | 24·4 | 118·2 | 92·9 | 398·6 | 43·0 |
| 1961 மார்கழி .. | 218·0 | 37·6 | 50·7 | 23·6 | 117·2 | 90·9 | 385·9 | 41·8 |
| 1962 ஆனி .. | 213·7 | 36·9 | 47·5 | 21·2 | 108·0 | 82·7 | 369·3 | 39·6 |
| **மொத்தம்** | | | | | | | | |
| 1961 புரட்டாதி .. | 592·8 | 100·0 | 207·0 | 100·0 | 127·3 | 100·0 | 927·2 | 100·0 |
| 1961 மார்கழி .. | 579·1 | 100·0 | 215·1 | 100·0 | 129·0 | 100·0 | 923·1 | 100·0 |
| 1962 ஆனி .. | 578·6 | 100·0 | 224·0 | 100·0 | 130·6 | 100·0 | 933·2 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1961ம் ஆண்டு மார்கழி மாதத்திற்கும், 1962ம் ஆண்டு ஆனி மாதத்திற்கும் இடையில் மொத்த வைப்புக்கள், ரூபா 99 இலட்சத்தால் அதிகரித்துள்ளன என்பது மேலேயுள்ள அட்டவணையிலிருந்து தெரிகிறது. வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, முக்கியமாகத் தவணை வைப்புக்கள் ரூபா 89 இலட்சத்தால் அதிகரித்தமையால் ஏற்பட்டது. சேமிப்பு வைப்புக்கள் ரூபா 16 இலட்சத்தால் அதிகரித்தன. ஆனற் கேள்வி வைப்புக்கள் ரூபா 5 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. மிகவும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக உள்ள தவணைவைப்புக்களின் உயர்ச்சி, முக்கியமாக நிதிநிலையங்களினது வைப்புக்களினுலும், ''ஏனைய வர்த்தகம்'' என்ற தொகுதியின் வைப்புக்களினுலும் ஏற்பட்டது. பெருந்தோட்டங்களினதும், தனியாட்களினதும் தவணை

வைப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவால் வீழ்ச்சியுற்றன. கேள்விவைப்புக் களில், வர்த்தகத் தாபனங்கள், ''ஏனைய வர்த்தகம்'' என்ற தொகுதிக்குச் சொந்தமான வைப்புக்கள் அதிகரித்திருக்கையில்; தோட்டங்கள், நிதிநிலை யங்கள், வர்த்தகம் அல்லா நிலையங்கள், தனியாட்கள் ஆகியனவற்றிற்குச் சொந்தமான வைப்புக்கள் வீழ்ச்சியடைந்தமையால், மொத்தக் கேள்வி வைப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. சேமிப்பு வைப்புக்களில் மிகச்சிறிய மாற்ற மே ஏற்பட்டதாயினும், தவணைவைப்புக்கள் அதிகரித்தமை, கேள்விவைப் புக்கணக்குகளிலிருந்து தவணைவைப்புக் கணக்குகளுக்கு நிதிகள் மாற்றப் பட்டமையால் ஏற்பட்டதாகும்.

வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தொழிற்பாடுகள், இவ்வருடத்தில், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனால் இறக்குமதிகளோடு சம்பந்தப்பட்ட கொடுகடன்களின் அளவு குறைந்தமையையும், உள்ளூர்த் தொழிற்தளங் களுக்கு நிதியீட்டிய வகையில் அதிகரித்தமையையும், பிரதிபலிக்கின்றன. இறக்குமதி உண்டியல்கள் ரூபா 673 இலட்சத்திலிருந்து ரூபா 496 இலட் சத்திற்கு, ரூபா 177 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. ஏற்றுமதி உண்டியல்கள் ரூபா 586 இலட்சத்திலிருந்து ரூபா 608 இலட்சத்திற்கு ரூபா 22 இலட்சத் தாற் சிறிது அதிகரித்தன. ரூபா 3004 இலட்சமாக இருந்த மேலதிகப் பற்றுக்கள், ரூபா 207 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று, ரூபா 2797 இலட்சமாக விளங்கின. கடன்கள், ரூபா 1361 இலட்சத்திலிருந்து ரூபா 1677 இலட்சத் திற்கு ரூபா 316 இலட்சத்தால் அதிகரித்தன. தொழிற்தகராறு இருந்த காலத்தில் வழக்கமான வங்கிச் சேவைகள் தடைப்பட்டிருந்த பொழுது மேலதிப்பற்றுக்களும் இறக்குமதி உண்டியல்களும் குறிப்பிடும்படியாக உயர்ந் தன. மேலதிகப்பற்றுக்களிற் தான் மிகக் கூடுதலான அதிகரிப்பு ஏற்பட்டது. அவை ரூபா 3004 இலட்சத்திலிருந்து, 1962ம் ஆண்டு மாசி மாதத்தில் ரூபா 4154 இலட்சத்திற்கும், சித்திரை மாதத்தில் ரூபா 4459 இலட்சத் திற்கும் அதிகரித்தன. அதன்பின் அவை நிதானமாகக் குறைந்து சென்று தற்போதுள்ள மட்டத்தை அடைந்தன. 1962ம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மேலதிகப் பற்றுக்கள் அதிகரித்தமை, பெரும்பாலும் தனி யாட்கள், கூட்டுநிலையங்கள் ஆகியோரின் உடமைகளான தீர்ப்பனவு செய்யப் படாத காசோலைகள், ஏனைய இருப்புச் சொத்துக்கள் ஆகியனவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு வர்த்தக வங்கிகள் அளித்த பற்று வசதிகள் அதிகரித்தமையால் ஏற்பட்டது. மறுபக்கத்தில் அதேகாலத்தில், வங்கிகள் கடன்களாக வழங்கிய தொகை குறைவுற்றது. ஏனெனில், வங்கிகள் தமது வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கிய கொடுகடன் வசதிகளைப் பெரும்பாலும் மேலதிகப் பற்று ரூபத்தில் வழங்கியமையினாலாகும். ஏற்றுமதி உண்டியல்கள் அதிகரித்தமைக்கு உள்ளகாரணம், வங்கித் தொழில் தடைப்பட்டிருந்ததன் விளைவாக அவ் உண்டியல்களுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை என்பதே. 1962ம் ஆண்டில் மேலதிகப் பற்றுக்கள் வீழ்ச்சியடைந்தமை, பெரும்பாலும் நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதிகள் குன்றந்த மட்டத்தில் இருந்ததன் விளைவாக, இறக்குமதிகளின் பேரில் வழங்கப்பட்டு வந்த கொடுகடனின் அளவும் குறைந்தமையால், ஏற்பட்டது. எனினும், தவணைக் கடன்களாக வழங்கப்பட்ட தொகை அதிகரித்தது. ஏனெனில் வீடமைத்தல், புதிதாக நிறுவப்பட்ட கைத்தொழில் நிலையங்களுக்கு நிதியீட்டுதல் ஆகிய தேவை களுக்காகத் தமது வாடிக்கைக்காரர்களுக்கு நியாயமான நீண்டகாலக் கடன் களாகச் சிலவங்கிகள் இப்பொழுது கடன் கொடுத்து வருகின்றமையால் இது ஏற்பட்டது.

1962ம் ஆண்டில், வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட சீர்திருத்தத்தில் ஒருபகுதி கையிருப்பில் உள்ள பணத்தொகையாகவும், ஏனைய, திரவமானமிச்சங்களாகவும் உள்ளன கையிருப்பிலுள்ள பணம் ரூபா 573 இலட்சத்திலிருந்து ரூபா 668 இலட்சத்திற்கு, ரூபா 95 இலட்சத்தால் அதிகரித்தது. வங்கிகளில் இருந்த பணத்தின் சராசரி மட்டம் முந்தைய வருடத்திற்குரிய ரூபா 1480 இலட்சத்திற்கு எதிராக, 1962ம் ஆண்டில் ரூபா 1860 இலட்சமாக விளங்கியது. வர்த்தக வங்கிகள் மகா வங்கியில் வைத்திருந்த மிகுதிகள், ரூபா 834 இலட்சத்திலிருந்து ரூபா 1045 இலட்சத்திற்கு ரூபா 211 இலட்சத்தால் அதிகரித்துள்ளன 1962ம் ஆண்டின் முதல் 5 மாதங்களிலும் உள்ள தீர்ப்பனவுத் தொழிற்பாடுகள் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த காலத்தில் வர்த்தக வங்கிகளின் பேரில் மகாவங்கியில் இருந்த மிச்சங்கள் அதிகரித்தன. ஏனெனில், வர்த்தக வங்கிகளின் உடைமையிலுள்ள தீர்ப்பனவு செய்யப்படாத காசோலைகளுக்கு எதிராக மகாவங்கி வர்த்தக வங்கிகளுக்குக் கொடுகடன் வசதியளித்தது. இதனால் வர்த்தக வங்கிகளின் மிகுதிகள் உயர்ந்தன. 1962ம் ஆண்டு ஆனி மாதமளவில் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகள் வழக்கம் போல் மீண்டதும், இந்த மிச்சங்கள் தமது உண்மையான மட்டங்களை அடைந்தன. வர்த்தக வங்கிகளின் உடைமையிலுள்ள அந்நிய நாணயங்கள், ரூபா 463 இலட்சத்திலிருந்து ரூபா 407 இலட்சத்திற்கு, ரூபா 56 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. இந்த மிச்சங்களின் சராசரி மட்டம், 1961ம் ஆண்டுக்குரிய ரூபா 540 இலட்சத்திற்கு எதிராக, 1962ம் ஆண்டு ரூபா 550 இலட்சமாக விளங்கிற்று. 1962ம் ஆண்டின் முதல் 9 மாதங்களிலும் இம்மிச்சங்களின் மட்டத்தில் ஏற்பட்ட மொத்தக் குறைவு, அக்காலத்தில் ஏற்பட்ட சென்மதி நிலுவைக் குறைவைத் தெரிவிக்கின்றது.

இறைசேரி உண்டியல்களுக்கான வட்டி விகிதம், 2.68 சதவீதத்திலிருந்து 2.80 சதவீதத்திற்கு மெதுவாக உயர்ந்ததோடு, வர்த்தக வங்கிகளின் உடைமையிலுள்ள இறைசேரி உண்டியல்களும், ரூபா 636 இலட்சத்திலிருந்து ரூபா 1114 இலட்சத்திற்கு அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் உடைமையிலுள்ள இறைசேரி உண்டியல்களின் சராசரி, முந்தைய வருடத்திலும் பார்க்க மிகக்கூடியதாகும். இவ் உண்டியல்களை உடைமைகொள்ளல், 1962ம் ஆண்டு ஆனி, ஆடி மாதங்களிலும், கடைக்காற்பகுதியிலும் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் உடைமையிலுள்ள நீண்டகால அரசாங்கப் பிணைகள், ரூபா 2932 இலட்சத்திலிருந்து ரூபா 236 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 3168 இலட்சத்திற்கு உயர்ந்தன. இந்த அதிகரிப்பு வருடத்தில் வெளிநின்ற பொதுக்கடன்களின் அதிகரிப்போடு ஏற்பட்டது. வெளிநின்ற நீண்டகாலப் பொதுப் படுகடன் மொத்தத் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூபா 1258 இலட்சத்தில், வர்த்தக வங்கிகள் உதவிய தொகை ரூபா 236 இலட்சமாக உள்ளது என்பது, புதிதாக வெளியிடப்பட்ட மொத்த அரசாங்கப் பிணைகளில் ஒரு சிறிய விகிதாச்சாரமான தொகையையே வர்த்தக வங்கிகள் பெற்றன, என்பதைக் காட்டுகின்றது. வர்த்தக வங்கிகளுக்குச் சொந்தமான கையிலுள்ள பணம், மகாவங்கியில் உள்ள மிகுதிகள், அந்நியச் செலாவணி, இறைசேரி உண்டியல்கள் ஆகிய உடைமைகள் முதலியன அதிகரித்ததைத் தொடர்ந்து, வர்த்தக வங்கிகளின் மேலதிகத் திரவச் சொத்துக்கள், 1962ம் ஆண்டுக்குரிய ரூபா 3750 இலட்சம் கொண்ட சராசரியிலிருந்து 1962ம் ஆண்டு ரூபா 4660 இலட்சத்திற்கு அதிகரித்தன. எனவே 1961ம் ஆண்டில், மொத்தக் கேள்வி வைப்புக்களில் 55.4 சதவீதமாக இருந்த திரவச் சொத்துக்கள், 1962ம் ஆண்டில் 56.4 சதவீதத்திற்கு அதிகரித்தன.

தொழிற் தகராறுகள் நிலவிய காலத்தில், வங்கிகளின் ஒதுக்குநிதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பை நீக்கிப் பார்க்கின். 1962ம் ஆண்டு வர்த்தக வங்கிகளின் மேலதிக ஒதுக்கு நிதிகள், 1961ம் ஆண்டுக்குரிய சராசரியிலும் பார்க்க மிகக் கூடியதாக இருக்கவில்லை. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்காக 1962ம் ஆண்டு மார்கழி மாதத்தில் மேலதிக ஒதுக்கு நிதிகள் ரூபா 13 இலட்சத்திலிருந்து ரூபா 96 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளன. 1962ம் ஆண்டு, முதல் 5 மாதங்களிலும் மேலதிக ஒதுக்கு நிதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, பிரதானமாக வர்த்தக வங்கிகள் மகாவங்கியில் வைத்த வைப்புக்கள் அதிகரித்தமையால் ஏற்பட்டது. இதற்கான விளக்கங்கள் இவ்வறிக்கையில் முற்பகுதிகளிற் கூறப் பட்டுள்ளன. சட்ட தேவைப்படியான ஒதுக்கு நிதிகளில் ஒருபகுதியைக் கைப் பணமாக வைத்திருக்கலாம் என்ற விதியை, வர்த்தக வங்கிகள் இவ்வருடம் கூடுதலாக உபயோகித்தன. 1962ம் ஆண்டின் பின் அரைப்பகுதியில் ஒதுக்கு நிதியாக உபயோகிக்கப்பட்ட கைப்பணத்தின் சராசரித் தொகை ஏறக்குறைய ரூபாய் 150 இலட்சமாகும். 1962ம் ஆண்டு புரட்டாதி மாதம் வரையிலுள்ள மகாவங்கியின் சஞ்சிகைகளிலும், இதற்கு முந்தைய ஆண்டு அறிக்கைகளிலும், வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு நிதி சம்பந்தமான அட்டவணைகளில் ''தேவை யான ஒதுக்குநிதி'' என்பது, ஒவ்வொரு மாதங்களிலும் கடைசியாய்த் தொழில் நடந்த நாளுக்கு உரியதாயுள்ளது. ஆனல், சட்டப்படி தேவையான ஒதுக்கு நிதிகள், வாரந்தோறும் முதற் கிழமைகளில் உள்ள வைப்பு, பொறுப்புக் களின் அடிப்படையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கணிக்கப்படுகின்ற மையால், இதைத் தழுவி இவ்வறிக்கையின் 9ம் அட்டவணையிற் தேவையான ஒதுக்கு நிதி சம்பந்தமாகவுள்ள எண்தொகைத் தொடர்களும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

வர்த்தக வங்கிகளின் மேலதிக ஒதுக்கு நிதிகள் குறைவான மட்டத்தில் இருந்தமை, வங்கிகள் தம்மிடையே கடன்படுதலையும், மகாவங்கியிலிருந்து கடன்படுதலையும் அதிகரிக்கச் செய்தது. அநேகமான வங்கிகள், வங்கிக ளிடையேயுள்ள அழைப்புக் கடன் சந்தையிற் கடன்பட்டன. எனவே அவ்வித அழைப்புக்கடன்களிலுள்ள குறைந்தபட்சவட்டிவிகிதம், 2 சதவீதத்திலிருந்து $2\frac{3}{4}$ சதவீதத்திற்கு ஆனி மாதத்தில் அதிகரித்தது. உயர்ந்தபட்ச வட்டி விகிதம் ஆடி மாதத்தில் 3 சத வீதத்திற்கு அதிகரித்தது. அதன்பின் குறைந்தபட்ச வட்டி விகிதமும், உயர்ந்தபட்ச வட்டி விகிதமும் $2\frac{3}{4}$ சத விகிதமாக விளங்கின. மார்கழி மாதத்தில் உயர்ந்தபட்ச வட்டி விகிதம் மறுபடியும் 3 சதவிகிதத்திற்கு அதிகரித்திருக்கையில், குறைந்தபட்ச வட்டி விகிதம் $2\frac{3}{4}$ சதவிகிதமாகவே இருந்தது. இவ்வட்டி விகிதங்களின் நட மாட்டங்கள், இவ்வாண்டின் வங்கிகளிடையேயுள்ள அழைப்புக் கடன் சந்தை யில் நிலவிய தொழிற்பாடுகளின் நிலையை மட்டுமன்றி, வங்கிகள் முழு வதற்குமான பெருமளவாய்க் கிடைக்கக்கூடிய மேலதிக ஒதுக்கு நிதிகள் அரிதானமையையும், பிரதிபலிக்கின்றன. மகாவங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் பட்ட கடன்பாடுகள் ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் வங்கிகள் தம்டையே ஒரு நியாயமான அளவு கடன்பட்ட பொழுதிலும், மிக உயர்ந்ததாக விளங்கின என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டு கின்றது. மகாவங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் பட்ட கடன்பாடுகள் 1962ம் ஆண்டு மார்கழி மாதத்தில் முற்றும் மறைந்தமை, வர்த்தக வங்கி களின் மேலதிக ஒதுக்குநிதி நிலைமை சீரடைந்ததை ஓரளவு காட்டுகின்றது.

### அட்டவணை II ஊ-4

### மகா வங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் பெற்ற கடன்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாத முடிவில்* | 1961 | 1962 |
|---|---|---|
| தை .. .. | 21·0 | — |
| மாசி .. .. | 20·0 | — |
| பங்குனி .. .. | 27·9 | — |
| சித்திரை .. .. | 16·0 | — |
| வைகாசி .. .. | 17·8 | — |
| ஆனி .. .. | 26·4 | 20·9 |
| ஆடி .. .. | 38·9 | 28·5 |
| ஆவணி .. .. | 21·0 | 15·3 |
| புரட்டாதி .. .. | 15·5 | — |
| ஐப்பசி .. .. | 1·0 | 1·6 |
| கார்த்திகை .. .. | 1·0 | 4·5 |
| மார்கழி .. .. | 20·6 | — |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*நிலுவையில் வெளிநின்ற தொகை.

வர்த்தக வங்கிகளின் கடன்கள், முற்பணங்கள் சம்பந்தமான அரை ஆண்டு அளவையிற் கிடைத்த விபரங்களின்படி, 1962ம் ஆண்டு ஆனி மாத முடிவில் உள்ள நிலை, பின்வரும் பகுதியில் ஆராயப்படுகிறது.

வங்கிகள் வழங்கிய முற்பணங்கள், எந்தெந்தத் தேவைகளுக்காக, எவ்வளவு காலத்திற்கு முன் மீட்கப்படவேண்டுமென வழங்கப்பட்டன, என்ற பாகுபாடுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை II ஊ-5

### *தேவைகளின்படியும், மீள்தற் காலங்களின்படியும், பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| தேவை | குறுகியகால (6 மாதத் திற்குள்) | | நடுத்தரகால (6 முதல் 30 மாதங்கள் வரை) | | நீண்டகால (30 மாதங்களுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (1) | (1) (7)ன் சதவீத மாக (2) | தொகை (3) | (3) (7)ன் சதவீத மாக (4) | தொகை (5) | (5) (7)ன் சதவீத மாக (6) | தொகை (7) | 7 மொத் தத்தின் சதவீத மாக (8) |
| **(அ) வர்த்தகம்** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 143·0 | 36·4 | 210·0 | 53·5 | 39·7 | 10·1 | 392·7 | 70·3 |
| மார்கழி 1961 .. | 137·4 | 36·2 | 200·9 | 53·0 | 41·0 | 10·8 | 379·2 | 69·1 |
| ஆனி 1962 .. | 144·3 | 36·9 | 207·2 | 53·0 | 39·7 | 10·1 | 391·2 | 68·0 |
| **(ஆ) நிதி** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 23·0 | 26·0 | 39·8 | 45·0 | 25·6 | 29·0 | 88·4 | 15·8 |
| மார்கழி 1961 .. | 22·4 | 25·3 | 41·0 | 46·2 | 25·3 | 28·5 | 88·7 | 16·2 |
| ஆனி 1962 .. | 21·7 | 25·6 | 42·8 | 50·5 | 20·4 | 24·1 | 84·8 | 14·7 |
| **(இ) விவசாயம்** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 3·5 | 32·4 | 3·7 | 34·3 | 3·6 | 33·3 | 10·8 | 1·9 |
| மார்கழி 1961 .. | 3·8 | 35·8 | 3·1 | 29·2 | 3·7 | 34·9 | 10·6 | 1·9 |
| ஆனி 1962 .. | 2·7 | 22·5 | 3·9 | 32·5 | 5·3 | 44·2 | 12·0 | 2·0 |
| **(ஈ) கைத்தொழில்** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 2·9 | 10·1 | 14·5 | 50·5 | 11·3 | 39·4 | 28·7 | 5·1 |
| மார்கழி 1961 .. | 3·2 | 13·3 | 13·6 | 56·7 | 7·2 | 30·0 | 24·0 | 4·4 |
| ஆனி 1962 .. | 2·9 | 9·2 | 14·2 | 45·1 | 14·4 | 45·7 | 31·5 | 5·5 |
| **(உ) நுகர்ச்சி** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 8·1 | 26·8 | 13·4 | 44·4 | 8·7 | 28·8 | 30·2 | 5·4 |
| மார்கழி 1961 .. | 10·6 | 32·4 | 13·2 | 40·4 | 8·9 | 27·2 | 32·7 | 6·0 |
| ஆனி 1962 .. | 11·5 | 30·1 | 14·3 | 37·4 | 12·4 | 32·5 | 38·2 | 6·6 |
| **(ஊ) ஏனைய** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 0·9 | 11·5 | 4·5 | 57·7 | 2·4 | 30·8 | 7·8 | 1·4 |
| மார்கழி 1961 .. | 4·8 | 35·8 | 5·6 | 41·8 | 3·1 | 23·1 | 13·4 | 2·4 |
| ஆனி 1962 .. | 9·5 | 55·6 | 5·9 | 34·5 | 1·7 | 9·9 | 17·1 | 3·0 |
| **மொத்தம்** | | | | | | | | |
| புரட்டாதி 1961 .. | 181·4 | 32·5 | 285·9 | 51·2 | 91·3 | 16·3 | 558·6 | 100·0 |
| மார்கழி 1961 .. | 182·2 | 33·2 | 277·3 | 50·5 | 89·1 | 16·2 | 548·6 | 100·0 |
| ஆனி 1962 .. | 192·6 | 33·5 | 288·2 | 50·1 | 94·0 | 16·4 | 574·9 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*முற்பணங்கள், கடன்களையும், மேலதிகப்பற்றுக்களையும், கழிவுபட்ட உண்டியல்களையும் உட்படுத்தும்.

1962ம் ஆண்டு ஆனி மாதத்தில் முடிவுற்ற அரை வருடத்தில், மொத்த முற்பணங்கள், ரூபா 5486 இலட்சத்திலிருந்து ரூபா 5749 இலட்சத்திற்கு ரூபா 263 இலட்சத்தால் அதிகரித்தன. தொழிற் தேவைக்கான முற்பணங்கள், ரூபா 240 இலட்சத்திலிருந்து ரூபா 75 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 315 இலட்சமாக விளங்கின. நுகர்ச்சித் தேவைக்கான முற்பணங்கள், ரூபா 55 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 327 இலட்சத்திலிருந்து ரூபா 382 இலட்சத்திற்கும், ஏனைய தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 37 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 134 இலட்சத்திலிருந்து ரூபா 171 இலட்சத்திற்கும், வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள், ரூபா 3792 இலட்சத்திலிருந்து ரூபா 120 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 3912 இலட்சமாகவும் விளங்கின. ஆயினும், 1961ம் ஆண்டு மார்கழி முடிவில், ரூபா 887 இலட்சமாக விளங்கிய நிதித்தேவைகளுக்கான முற்பணங்கள், 1962ம் ஆண்டு ஆனி மாத முடிவில் ரூபா 848 இலட்சத்திற்குக் குறைந்தன. இது, ரூபா 39 இலட்சம் கொண்ட வீழ்ச்சியாகும். தொழிற் தேவைகளுக்கான முற்பணங்கள் அதிகரித்திருக்கையில், விவசாயத் தேவைகளுக்கான முற்பணங்களும், ரூபா 106 இலட்சத்திலிருந்து ரூபா 120 இலட்சத்திற்கு ரூபா 14 இலட்சத்தால் அதிகரித்தன. வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் அதிகரித்தமை, பெரும்பாலும் ஏற்றுமதி வர்த்தகங்களை முதலீட்டுவதற்கு எழுந்த கேள்விகள் அதிகரித்ததன் பயனுல், ஏற்பட்டது. நிதித்தேவைகளுக்கான முற்பணங்கள் வீழ்ச்சியுற்றமை, வாடகைக் கொள்வனவுகளை நேரடியாகவும், அல்லது வாடகைக் கொள்வனவுக் கூட்டு நிலையங்களின் ஊடாகவும், நிதியீட்டுவதற்கான வங்கிக் கொடுகடன்களிலும் மட்டம் மொத்தத்திற் குறைந்தமையைப், பிரதிபலிக்கின்றது. விவசாயத் தேவைகளுக்கும், தொழிற் தேவைகளுக்குமான முற்பணங்கள் (குறிப்பாகத் தொழில்களுக்கான முற்பணங்கள்), அதிகரித்தமை, குறிப்பிடத்தக்கதாக உள்ளதேனெனில், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு நிதியீட்டுவதில் வங்கிகள் அதிகரித்த அக்கறை எடுக்கின்றன என்பதனுலேயே ஆகும். நீண்டகால உபயோகமுடைய பல தரப்பட்ட பொருட்களின் இறக்குமதி குறைவுற்ற பொழுதிலும், நுகர்ச்சித் தேவைகளுக்கான கடன்கள் 1961ம் ஆண்டு புரட்டாதி மாதத்திற்குரிய தொகையிலும் பார்க்க, 80 இலட்சம் ரூபாய்கள் கூடுதலான 382 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தமை, ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். நுகர்ச்சித் தேவைகளுக்கான முற்பணங்கள் என்ற தொகுதியில் சொந்த விடயங்களுக்கான கடன்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றமையால், ஒருவேளை அவைகள் அதிகரித்தமையால் இவ்வதிகரிப்பு ஏற்பட்டிருக்கவும் கூடும். வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் முற்பணங்களில் ஒவ்வொரு தேவைக்குமான தொகையைச் சதவீதமாக நோக்கின் வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள், 1961ம் ஆண்டு புரட்டாதி மாதத்திற்குரிய 70.3 சதவீதத்திலிருந்து, 1962ம் ஆண்டு ஆனி மாதத்தில் 68.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன. இது, வர்த்தக வங்கிகள் ஓரளவிற் தமது நிதிகளை வழக்கமான துறைகளிலிருந்து ஏனைய துறைகளுக்கு விநியோகித்த

## அட்டவணை II ஊ-6

### அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்

| அடமானத்தின் வகை | 1961 புரட்டாதி 30 | | 1961 மார்கழி 31 | | 1962 ஆனி 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை | % |
| உண்டியல்கள் .. .. | 148·5 | 26·6 | 140·2 | 25·6 | 147·2 | 25·6 |
| அரசாங்கப் பிணைகள் .. .. | 11·6 | 2·1 | 11·7 | 2·1 | 12·6 | 2·2 |
| கூட்டு நிலையங்களின் பங்கு முதல் .. | 28·8 | 5·2 | 28·5 | 5·2 | 28·6 | 5·0 |
| தவணை, சேமிப்புவைப்புக்களும், ஏனைய பணவைப்புக்களும் (ஆயுட் காப்புறுதிகளின் பணப் பெறுமானம் உட்பட) .. | 20·4 | 3·7 | 23·3 | 4·2 | 26·4 | 4·6 |
| வியாபார இருப்புகள் .. .. | 169·9 | 30·4 | 168·3 | 30·7 | 160·9 | 28·1 |
| அசைவற்ற சொத்து .. .. | 48·5 | 8·7 | 44·7 | 8·1 | 49·0 | 8·5 |
| ஏனையவை .. .. .. | 62·0 | 11·1 | 76·0 | 13·9 | 88·4 | 15·4 |
| பிணையற்றவை .. .. | 68·9 | 12·3 | 55·8 | 10·2 | 60·0 | 10·5 |
| மொத்தம் .. | 558·6 | 100·0 | 548·6 | 100·0 | 573·1 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

மையைப் பிரதிபலிக்கின்றது. இதே காலத்தில் வங்கிகளின் மொத்த முற்பணங்களில் விவசாயத் தேவைக்கான முற்பணங்கள் 1.9 சதவீதத்திலிருந்து 2.0 சதவீதத்திற்கும், கைத்தொழிற் தேவைகளுக்கானவை 5.1 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதத்திற்கும், அதிகரித்தன. இவ் எண்தொகைகள், புதிய உள்நாட்டுக் கமத்தொழில், கைத்தொழில் ஆகிய தொழிற்பாடுகளுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்த கொடுகடன்கள் அவ்வளவு தூரம் குறிப்பிடும்படியாக அதிகரிக்கவில்லை என்பதையும், இத்தேவைகளுக்காக வங்கிகளிடமிருந்து கிடைக்கக்கூடிய மொத்தத் தொகை இன்னமும் மிகக்குறைவான மட்டத்திலேயே தங்கிநின்றது என்பதையுமே, காட்டுகின்றன.

அரையாண்டு அளவீட்டின் அடிப்படையில் முற்பணங்களை அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்திப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட முற்பணங்களை அடமானங்களின் அடிப்படையிற் பாகுபடுத்தி நோக்குமிடத்து, 1961ம் ஆண்டு புரட்டாதி மாதத்திற்கும், 1962ம் ஆண்டு ஆனி மாதத்திற்குமிடையில் அவ்வளவு மாற்றமெதுவும் ஏற்படவில்லை. உண்டியல்களுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 25.6 சதவீதத்திற்கு 1.0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. அரசாங்கப் பிணைகளுக்கு எதிராகவும், கூட்டு நிலையங்களின் பங்கு முதலுக்கு எதிராகவும் வழங்கப்பட்ட முற்பணங்களில், ஓரளவில் மாற்றங்கள் காணப்படவில்லை.

ஆனுல் சகலவிதமான பண வைப்புக்களுக்கும் எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 3.7 சதவீதத்திலிருந்து 4.6 சதவீதத்திற்கு அதிகரிக்க, வியாபார இருப்புக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 30.4 சதவீதத்திலிருந்து 28.1 சதவீதத்திற்கு, மற்றவைகளிலும் பார்க்கக் கூடிய விகிதாச்சாரமான முறையில் வீழ்ச்சியுற்றன. இவ்வீழ்ச்சி, சிலவகையான இறக்குமதிப் பொருட்களின் இருப்புக்கள் குறைந்தமையைப் பிரதிபலிக்கின்றது. பிணையற்ற முற்பணங்களும் 12.3 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன. ஆனுல் ''ஏனையவை'' என்ற தொகுதியைச் சேர்ந்த முற்பணங்கள் 11.1 சதவீதத்திலிருந்து 15.4 சத வீதத்திற்குக் குறிப்பிடும்படியாக அதிகரித்தன. ''ஏனையவை'' என்ற தொகுதியுள்ள அடமானங்களிற் பெரும் விடயமாக, நிதிக்கூட்டுத் தாபனங்கள் வங்கிகளிடம் அடமானமாக ஒப்படைத்த வாடகைக் கொள்வனவுப் பத்திரங்கள், முக்கியமாக அமைந்துள்ளன.

முற்பணங்களை வட்டி விகிதங்களின்படி பாகுபடுத்திப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை II ஊ-7

### வட்டி விகிதங்களின்படியுள்ள முற்பணங்கள்*

தொகை பத்து இலட்சம் ரூபாய்கள்

| வட்டிவிகிதம் % | 1961 புரட்டாதி 30 | | 1961 மார்கழி 31 | | 1962 ஆனி 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தத்தின் சதவீதமாக | தொகை | மொத்தத்தின் சதவீதமாக | தொகை | மொத்தத்தின் சதவீதமாக |
| $2\frac{1}{2}$ கீழ் .. .. .. | 3·0 | 0·6 | 4·0 | 0·8 | 4·4 | 0·8 |
| $2\frac{1}{2}$ .. .. .. | ... | ... | ... | ... | ... | ... |
| 3 .. .. .. | 1·8 | 0·4 | 2·0 | 0·4 | 1·8 | 0·3 |
| $3\frac{1}{2}$ .. .. .. | 11·0 | 2·3 | 5·6 | 1·2 | 4·4 | 0·8 |
| 4 .. .. .. | 8·4 | 1·7 | 9·5 | 2·0 | 13·8 | 2·7 |
| $4\frac{1}{2}$ .. .. .. | 16·5 | 3·4 | 17·8 | 3·7 | 15·6 | 3·0 |
| 5 .. .. .. | 19·7 | 4·1 | 19·7 | 4·1 | 19·9 | 3·8 |
| $5\frac{1}{2}$ .. .. .. | 6·1 | 1·3 | 5·6 | 1·2 | 12·8 | 2·5 |
| 6 .. .. .. | 244·7 | 50·8 | 234·1 | 48·5 | 259·6 | 50·2 |
| $6\frac{1}{2}$ .. .. .. | 33·9 | 7·0 | 78·2 | 16·2 | 49·1 | 9·5 |
| 7 .. .. .. | 86·5 | 18·0 | 87·7 | 18·2 | 112·6 | 21·8 |
| $7\frac{1}{2}$ .. .. .. | 41·7 | 8·7 | 5·0 | 1·0 | 10·6 | 2·0 |
| 8 உம் அதற்கு மேலும் .. | 8·3 | 1·8 | 13·7 | 2·8 | 12·6 | 2·4 |
| மொத்தம் .. | 481·8 | 100·0 | 482·9 | 100·0 | 517·2 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*நடைமுறைச் செலாவணி விகிதங்களின்படி கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களைத் தவிர்த்து.

வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை வட்டி விகிதங்களின் படி பாகுபடுத்தி ஒப்பிட்டு நோக்குமிடத்து, 1961ம் ஆண்டு புரட்டாதி மாதத்திற்கும், 1962ம் ஆண்டு ஆனி மாதத்திற்கும் இடையில் வர்த்தக வங்கியிற் சிறிது உயர்ந்த வட்டி விகிதங்களிற் கடன் கொடுக்க முற்பட்டமை, காணப்படுகின்றது. வர்த்தக வங்கிகளின் கடன்கள், முற்பணங்களுக்கு முந்தைய வருடத்தில் உள்ளது போல் 6 சதவிகித வட்டி, மிகவும் வகைக் குறிப்பினதான வட்டி விகிதமாய் விளங்கியது. மொத்தக் கடன்கள், முற் பணங்களில் 50.2 சதவீதமானவை 6 சதவட்டிக்கு வழங்கப்பட்டன. 1961ம் ஆண்டு மார்கழியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, 1962ம் ஆண்டு ஆனியில் உள்ள கடன்களில், 6½ சதவிகித வட்டிக்கு வழங்கப்பட்டவை 16.2 சதவிகிதத்திலிருந்து 9.5 சதவிகிதத்திற்குக் குறைந்திருக்கையில், 7 சதவிகித வட்டிக்கு வழங்கப்பட்டவை 18.2 சதவிகிதத்திலிருந்து 21.8 சதவிகிதத்திற்கும், 7½ சதவிகித வட்டிக்கு வழங்கப்பட்டவை 1.0 சத விகிதத்திலிருந்து 2.0 சதவிகிதத்திற்கும் அதிகரித்துள்ளன. வியாபார இருப் புக்கள், அசைவுள்ள சொத்துக்கள் ஆகிய அடமானங்களுக்கு எதிராக வழங் கிய கடன்கள், முற்பணங்கள் ஆகியவற்றின் மீதுள்ள வட்டி விகிதத்தை வர்த்தக வங்கிகள் உயர்த்தின. வியாபார இருப்புக்களில் அடமானங்களுக்கு எதிராக உள்ள வட்டி விகிதம் உயர்ந்தது. அதே வேளையில் அசைவற்ற சொத்துக்களையும் அடமானமாகக் கொண்ட கடன்களின் மீதுள்ள உயர்ந் தப்பட்ச வட்டி விகிதமும், 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு ஆனி, 1962ல் அதிகரித்தது. கடன்கள், முற்பணங்களின் பேரில் வர்த்தக வங்கிகள் விதித்த ஏனைய வட்டி விகிதங்களில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

## வங்கித் தீர்ப்பனவுகள்

1961ம் ஆண்டில் ரூபா 7428 இலட்சமாக விளங்கிய வங்கித் தீர்ப்பனவு களின் மாதச்சராசரி, 1962ம் ஆண்டில் ரூபா 7116 இலட்சத்திற்குக் குறை வுற்றது. 1962ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலும் வழக்கமான வர்த்தக வங்கித் தொழிற்பாடுகள் தடைப்பட்டு இருந்தமையால் வங்கித் தீர்ப்பனவுகள் மிகக் குறைவான மட்டத்தில் இருந்தன. 1962ம் ஆண்டு சித்திரை மாதத்தில் வங்கித் தீர்ப்பனவுகள் ரூபா 16736 இலட்சத்திற்கு உயர்ந்தன. இது ஏனெனில், முன்பு தீர்ப்பனவு செய்யப்படாமல் தங்கு படியாகியிருந்த காசோலைகளை இம்மாதத்திற் தீர்ப்பனவு செய்வதற்குக் கொண்டு வந்தமையால் ஆகும். தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமானத்தில் இவ்வருடம் ஏற்பட்ட முழுமையான வீழ்ச்சி, பெரும்பாலும் வங்கி வேலை நிறுத்தம் நடைபெற்ற காலத்தில் காசோலைகள் பாவிக்கப்பட்டவிதத்தைப் பார்க்கக்கூடுதலான அளவிற் பணம் பாவிக்கப்பட்டமையாலாகும்.

## ஏனைய நிதிநிலையங்கள்

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, வர்த்தக வங்கிகள், சேமநிதிப்பத்திரங்கள் ஆகியவைகளிலுள்ள மொத்தச் சேமிப்பு வைப்புக்கள் 1961ம் ஆண்டில் உள்ள ரூபா 8237 இலட்சத்திலிருந்து, 1962ம் ஆண்டு ரூபா 8882 இலட்சத்திற்கு ரூபா 645 இலட்சத்தால் அதிகரித்தன. இவற்றின் மிகக்கூடியதான அதிகரிப்பு வர்த்தக வங்கிகளது தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களில் ஏற்பட்டது. அவை, ரூபா 3638 இலட்சத்திலிருந்து ரூபா 4264 இலட்சத்திற்கு ரூபா 626 இலட்சத்தால் அதிகரித்தன. தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியில் உள்ள வைப்புக்கள், ரூபா 3519 இலட்சத்தி லிருந்து ரூபா 37 இலட்சத்தால் அதிகரித்து, ரூபா 3556 இலட்சமாக விளங்கின. முந்தைய வருடத்தில், தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிற் தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி வைப்புக்களில் ஏற்பட்ட உயர்ச்சி, ரூபா 85 இலட்சமாக உள்ளது. இலங்கைச் சேமிப்பு வங்கியில் உள்ள மொத்த வைப் புக்கள், முந்தைய வருடத்தில் ரூபா இரண்டு இலட்சத்தால் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து 1962ம் ஆண்டில் ரூபா 20 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. இலங்கைச் சேமிப்பு வங்கி வைப்புக்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, அவ்வங்கியிற் கொடுக்கப்படும் வட்டி விகிதம் 2½ சதவிகிதத்திலிருந்து 3 சத விகிதத்திற்கு 1962ம் ஆண்டு தைமாத முதல் உயர்த்தப்பட்ட பொழுதிலும் கூட ஏற் பட்டது. வர்த்தக வங்கியில் உள்ள சேமிப்பு வைப்புக்கள் 1962ம் ஆண்டு ஆனிமாத முதல் நிதானமான அதிகரிப்பைக் காட்டியுள்ளன. இவ்வைப்புக் களின் அதிகரிப்பில் மிகக்கூடுதலான உயர்ச்சி, 1962ம் ஆண்டு ஐப்பசி மாதத் திற்கும், மார்கழி மாதத்திற்கும் இடையில் ஏற்பட்டது. இவ்விரு மாதங் களுக்கும் இடையில் வைப்புக்கள், ரூபா 249 இலட்சத்தால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளில் உள்ள தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களின் அதிகரிப் பில் ஒரு நிதானமான விகிதாச்சாரமாக உள்ளதொகை தனியாட்களுக்குச் சொந்தமானதாகவும், ஆனற் பெரும் தொகையான பகுதி பலதரப்பட்ட கூட்டு நிலையங்கள், ஏனைய தாபனங்கள் ஆகியனவற்றின் வைப்புக்களாகவும் உள்ளன.

ஊழியர் சேமநிதியினுற் திரட்டப்பட்ட நிதி, 1961ம் ஆண்டிற்குரிய ரூபா 570 இலட்சத்திற் கெதிராக, 1962ம் ஆண்டு ரூபா 582 இலட்சமாக விளங்கியது. எனவே, 1962ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 12 இலட்சமாகும். இந்நிதியினுற் திரட்டப்பட்ட தொகை அவ்வளவு தூரம் அதிகரிக்காதமைக்கு உள்ள காரணம், முந்தைய ஆண்டுகளில் ஏற்கனவே நாட்டிலுள்ள தொழில்களில் அநேகமானவை இந்த நிதியின் கீழ் சேர்த் தாயிற்று என்பதே.

அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினது மொத்தக் கடன்கள், ஒப்பரவு முதலீடுகள் ஆகிய நிலுவைகள், 1961ம் ஆண்டில் இருந்த 209 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1962ம் ஆண்டில் 228 இலட்சம் ரூபாய்களுக்கு 19

அட்டவணை II ஊ-8

சேமிப்பு வைப்புக்களும் சேமநிதிப் பத்திரங்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961ம் ஆண்டு முடிவில் | 1962ம் ஆண்டு முடிவில் | மாற்றம் |
|---|---|---|---|
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி .. .. | 351·9 | 355·6* | + 3·7 |
| இலங்கை சேமிப்பு வங்கி .. .. .. | 75·3 | 73·3* | − 2·0 |
| வர்த்தக வங்கிகள் (தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்கள்) .. .. .. .. | 363·8 | 426·4 | +62·6 |
| சேமநிதிப்பத்திரங்கள் (நிலுவையில் உள்ளவை) .. | 32·7 | 32·9 | + 0·2 |
| மொத்தம் .. | 823·7 | 888·2* | +64·5 |

*தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மகா வங்கி.

இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன. இவை இவ்வருடத்தில், 1961ல் ஏற்பட்ட 30 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நிகர அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானவையாகும். இக்கூட்டுத்தாபனத்தால் 1962ம் ஆண்டில் வழங்கப் பட்ட கடன்கள் ஒரு சிறிய விகிதாச்சாரமான முறையில் மட்டும் அதிகரித் தமை, இக்கூட்டுத்தாபனம் கடன்வழங்குவதற்காக உள்ள புதிய பொருள் வளங்கள் மிகக் குறைவாக இருந்தமையைக் காட்டுகின்றது. 1962ம் ஆண்டின் 12 மாதங்களிலும் இக்கூட்டுத்தாபனம் வழங்கிய கடன்களின் மொத்தத் தொகை, ரூபா 29 இலட்சமாக இருந்தமை முந்தைய ஆண்டிற்குரிய ரூபா 43 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. இவ்வருடத்தில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் நிகர அதிகரிப்பையும், கடன்களின் எண்ணிக்கை யையும் நோக்கின், அவற்றிற் பெரும் பகுதியானவை சிறு தொழில் நிலையங் களையும், சிறுதொழில்களையும் நிதியீட்டுவதற்காக உள்ளன எனத் தெரிகிறது.

விவசாயத் தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனத்தின் இவ்வருடத் தொழிற்பாடுகளின் மிகக் குறிப்பிடும்படியான அம்சம், நிலுவையில் வெளி நின்ற கடன்களின் மொத்தப் பெறுமானம் நிதானமாகக் குறைவுற்றமையே யாகும். முந்தைய வருடத்தில் வழங்கப்பட்ட கடன்கள் 8 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சி அடைந்தமைக்கு எதிராக இவ்வருடத்தில் அவை 10 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. முந்தைய வருடத்தில் ஏற்பட்டது போலவே இவ்வருடத்திலும் இக்கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கக்கூடிய பொருள் வளங்கள் குன்றியமையால், இக்கூட்டுத் தாபனத்தால் வழங்கப் பட்ட கடன்கள் அனைத்தும், திருப்பிப் பெறப்பட்ட மூலதனத்திலிருந்தே வழங்கப்பட்டன. இவ்வருடத்தில் கமத்தொழிற் தேவைகளுக்காக வழங்கப் பட்ட கடன்கள், ரூபா 20 இலட்சமாக இருந்தமை முந்தைய ஆண்டிற்குரிய ரூபா 26 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. தொழிற் தேவைகளுக்காக வழங்கப்பட்ட கடன்கள், 1961ம் ஆண்டிற்குரிய 6 இலட்சம் ரூபாய்களி லிருந்து 1962ம் ஆண்டில் 3 இலட்சம் ரூபாய்களுக்கு 3 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. தனக்கு எட்டக்கூடிய பொருள் வளங்கள் குன்றிய பொழுதி

லும் கூட, கமத்தொழில், தொழில் ஆகியனவற்றிற்கு நிதியீட்டும் கொள்கையை இக்கூட்டுத்தாபனம் தொடர்ந்து நடத்தியது என்பதை மேலே கூறப்பட்ட எண் தொகைகள் காட்டுகின்றன. விவசாயத் தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனத்தைப் போலவே தேசிய ஈட்டு வங்கியால் வழங்கப்பட்டு நிலுவையில் நின்ற மொத்தக் கடன்களும், ஒப்பியல்பான போக்கைக் காட்டுகின்றன. 1961ம் ஆண்டில் ரூபா 2 இலட்சத்தால் அதிகரித்துள்ள தேசிய ஈட்டு வங்கியின் கடனுதவிகள், 1962ம் ஆண்டு 4 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்று, ரூபா 563 இலட்சத்திலிருந்து ரூபா 559 இலட்சத்திற்குக் குறைந்தன. தேசிய ஈட்டு வங்கிக்கும் புதிய நிதிகள் கிடையாமற் போனமையால், இவ்வங்கி வழங்கிய புதிய கடன்கள், திருப்பிப் பெறப்பட்ட மூலதனத்திலிருந்து வழங்கப்பட்டன. கடந்த வருடத்தைப் போலல்லாது, இவ்வருடம், இவ்வங்கி கடன் முறிகள் எதையும் விடுக்கவில்லை. எனவே இவ்வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் முந்தைய வருடத்தில் அதிகரித்ததற்கு எதிராக இவ்வருடம் வீழ்ச்சியுற்றன.